


# தமிழ் செம்மொழி தீர்மானம்: சன்மார்க்க சபைக்கு பாராட்டு




பொன்னமராவதி அருகே மேலசிவபுரி கணேச‍ கலை அறிவியல் கல்லூரியில் தொல்காப்பியர் நூற்றாண்டு நிறைவு விழாவில் கவிஞர் ‍மிழச்சி தங்கபாண்டியன் பேசினார்.

பொன்னமராவதி , ஜூலை 28-

தமிழ்செம்மொழி என முதன் முதல் முறையாக தீர்மானம் இயற்றியது கணேசர் கலை அறிவியல் கல்லூரி சார்ந்த சன்மார்க்க சபை தான் என்று கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் பேசினார்.

பொன்னமராவதி அருகே மேலசிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரியில் தொல்காப்பியனார் நூலக நூற்றாண்டு நிறைவு விழா நடந்தது. சபைத்தலைவர் சிங்காரம் தலைமை வகித்தார். சபை செயலாளர் ராமலிங்கம் முன்னிலை வகித்தார். இதில் கலந்து கொண்ட கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் பேசியதாவது:

தமிழ் மொழி, பண்பாடு என்பன உலக நாகரிகத்திற்கு அடிப்படையானது. உழு தொழிலிலும் (விவசாயம்) கடல் வாணிபமும் தமிழர்களின் தனித்துவத்தை மேன்மையை உலகுக்கு உணர்த்தின. நயாகரா நீர் வீழ்ச்சியின் முகப்பில் தமிழில் எழுதப்பட்டது. கிறிஸ்தவர்களால் போற்றப்படும் ஜெருசலேமில் பைபிள் 66 உலக மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. அவற்றில் இந்திய மொழிகளில் தமிழில் மட்டுமே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அவ்வளவு சிறப்பு வாய்ந்த தமிழ் மொழி. அந்த தமிழ்மொழி செவ்வியல் மொழியாக அறிவிக்கப்பட வேண்டும் என 1918ம் ஆண்டு முதன்முறையாக கல்லூரி சன்மார்க்க சபை தீர்மானம் இயற்றியுள்ளது. உண்மையில் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. நல்ல தமிழில் , தமிழ் பண்பாடு சிதையாமல் எழுத வேண்டும். நவீனத்துவம், பின்னவினத்துவம் என்று கூறிக் கொண்டு நமது பண்புகளையும் அடையாளங்களையும் மறப்பதும் மறைப்பதும் தவறு.

இவ்வாறு அவர் பேசினார்.

கல்லூரி நூலகத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பிலான நூல்களை நன்கொடையாக வழங்கிய புதுக்கோட்டை உலகநாதனுக்கு பாராட்டு விழா நடந்தது. விழாவில் கல்லூரி பேராசிரியர்கள் , அலுவலர்கள் , சன்மார்க்க சபை நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முதல்வர் மணி வரவேற்றார். நூலகர் முருகேச பாண்டியன் நன்றி கூறினார்.

93வது வயதில்

# கல்லூரியில் கணினி கற்கும் முதியவர்



மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரியில் கணினி கற்பதற்காக சான்றிதழ் வகுப்பில் சேர்ந்துள்ள முதியவர் சோமசுந்தரம். அவருக்கு பேராசிரியர்கள் பயிற்சி அளிக்கின்றனர்.

பொன்னமராவதி, ஜூலை 11: மேலைச்சிவபுரியில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் 93 வயது முதியவர் கணினி வகுப்பில் சேர்ந்துள்ளார்.

பொன்னமராவதி அருகே மேலைச்சிவபுரியில் கணேசர் கலை அறிவியல் கல்லூரி உள்ளது. இங்கு புதிதாக கணினி சான்றிதழ் வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. தொழில்முனைவோர் மற்றும் சுயவேலை மேம்பாட்டு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் மூலம் (ஐஇசிடி) கணினி சான்றிதழ் வகுப்புகள் நடத்தப்படுகிறது. இந்த வகுப்பில் சேர்ந்து படிப்பதற்கு வேந்தன்பட்டியை சேர்ந்த சோமசுந்தரம் என்ற 93 வயது முதியவர் கல்லூரி முதல்வர் மணியிடம் விண்ணப்பம் அளித்தார். சம்மந்தப்பட்ட துறையின் இயக்குனரிடம் கலந்தாலோசித்த பின்னர் சோமசுந்தரம் மாணவராக சேர்க்கப்பட்டார். அவரை கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினர்.

→ தினகரன்
11-7-09

---





# 'ஆர்வமும், முயற்சியும் இருந்தால் எளிதில் ஆங்கிலம் பேசலாம்'

பொன்னமராவதி, ஜூலை 18: ஆர்வமும், முயற்சியும் இருந்தால் எளிதில் ஆங்கிலம் பேசலாம் என்றார் கென்ய நாட்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோஒக்குட்.

பொன்னமராவதி அருகே உள்ள மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆங்கிலத் துறை கருத்தரங்கில், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நிர்வாகத் துறையில் ஆராய்ச்சி செய்து வரும் அவர் பங்கேற்றுப் பேசியது:




கருத்தரங்கில் பேசுகிறார் கென்ய நாட்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோஒக்குட்.

உலகமயம் என்ற சூழலில் ஆங்கிலத்தின் அவசியம் தவிர்க்க முடியாதது. அதைக் கற்பது காலத்தின் கட்டாயம். ஆங்கிலத்தை கற்பது கடினம் இல்லை. கென்ய நாட்டின் தாய்மொழி லூ என்னும் பழங்குடியின மொழியாகும். எழுத்து வடிவமற்ற இந்த மொழியில் இலக்கிய வடிவங்களும் இல்லை.

எனக்கு தற்போது ஐந்து மொழிகள் தெரியும். பள்ளிப்படிப்பின் போதே ஆங்கில அறிவை வளர்த்துக் கொண்டேன். இன்று உலக அளவில் பல்வேறு கல்வி நிலையங்களுக்குச் சென்று என்னால் உரையாட முடியும்.

ஆங்கில நாளிதழ்களைப் படித்து வந்தால் போதும், விரைவில் ஆங்கிலம் பேசலாம். மற்றவர்கள் ஆங்கிலம் பேசுவதை உற்று கவனியுங்கள். அதை முன் மாதிரியாகக் கொள்ளுங்கள். விரைவாகவும், தெளிவாகவும், கூச்சமின்றியும் ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்களுக்கு உலகம் முழுவதும் நல்ல வரவேற்பு உள்ளது. ஆங்கிலப் பேச்சும், கூடவே அடிப்படை கணினி கல்வியும் இருந்தால் உலகம் முழுவதும் வேலை தர பன்னாட்டு கம்பெனிகள் காத்துக் கிடக்கின்றன என்றார் அவர்.

சபை செயலர் சித. ராமலிங்கம் தலைமை வகித்தார். பேராசிரியர்கள் இப்ராஹிம் மூசா, வே.அ. பழனியப்பன், மோகன் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

ஆங்கிலத் துறைப் பேராசிரிய[illegible] குழந்தைவேலு வரவேற்றார். கல்லூரி முதல்வர் தா. மணி நன்[illegible] கூறினார்.

# மேலைச்சிவபுரி கணேசர் கல்லூரி நூற்றாண்டு விழா இன்று தொடக்கம்

பொன்னமராவதி, செப். 26: புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி அருகேயுள்ள மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை மற்றும் கணேசர் கலை அறிவியல் கல்லூரியின் நூற்றாண்டு விழா வெள்ளிக்கிழமை தொடங்குகிறது.

இதுகுறித்து மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை வெளியிட்ட செய்திகுறிப்பு:

"கடந்த 1909-ம் ஆண்டு இவ்வூரைச் சேர்ந்த வ.பழ.சா. அண்ணாமலை செட்டியார், வ.பழ.சா. பழனியப்ப செட்டியார் ஆகியோரால் சன்மார்க்க சபையும், கணேசர் செந்தமிழ்க் கல்லூரியும் (தற்போது கணேசர் கலை அறிவியல் கல்லூரி) தொடங்கப்பட்டன.

'சைவமும் தமிழும் தழைத்து ஓங்குக' என்னும் குறிக்கோளுடன் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், சோழவந்தான் அரசஞ்சண்முகனார் ஆகியோர் இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக பெரும் பங்காற்றினர்.

சன்மார்க்க சபையில் ஆண்டுதோறும் நடைபெறும் தமிழ் மாநாட்டில் உ.வே. சாமிநாத அய்யர் உள்ளிட்ட தமிழகத்தின் மூத்த தமிழறிஞர்கள் பெரும்பாலானோர் உரை நிகழ்த்தியுள்ளனர்.



நூற்றாண்டு காணும் மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரி.

தினமணி 27/9/08

தமிழைச் செம்மொழியாக்க வேண்டும் என கடந்த 1919-ம் ஆண்டிலேயே முதல் தீர்மானம் நிறைவேற்றிய பெருமைக்குரியது இச்சபையாகும். 1909-ல் 'ஸ்ரீ கணேசர் செந்தமிழ்க் கலாசாலை' என்னும் தொடக்கப் பள்ளியும் மதுரை தமிழ்ச் சங்கத்தின் பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் ஆகிய தகுதிகளுக்கான வகுப்புகளையும் இக்கல்லூரி நடத்திவந்தது.

தொடர்ந்து கணேசர் செந்தமிழ்க் கல்லூரி என்னும் பெயரில் 1938-ல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இணைவுப் பெற்று தமிழ் பண்டிதப் பாடத்தில் பட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து கடந்த 1994 - 95-ல் சுயநிதிப் பிரிவு மூலம் கலைப்படிப்புகள் தொடங்கப்பட்டு முழு அளவிலான கலை அறிவியல் கல்லூரியாக உருவெடுத்தது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பும் பழம்பெருமையும் வாய்ந்த இக்கல்லூரி நிகழாண்டில் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது.

முதல் நாள் விழா கல்லூரியின் தலைவர் சி. நாகப்பன் வரவேற்புரையுடன் சன்மார்க்க சபைத் தலைவர் ப.சா. சிங்காரம் முன்னிலையில் தொடங்குகிறது.

தொடர்ந்து முனைவர் தமிழண்ணல், கோவிலூர் ஆதீனத் தலைவர் நாச்சியப்ப தேசிக அடிகளார், சென்னை கம்பன் கழகத் தலைவர் ராம. வீரப்பன், வடலூர் ஊரன் அடிகள், சபைப் பொருளர் சி. சாமிநாதன் உள்ளிட்டோர் உரை நிகழ்த்துகின்றனர்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நூற்றாண்டு விழா நூலகக்கட்டத் திறப்பு விழாவுக்கு, மாநிலங்களவை உறுப்பினர் ஏ.எம். சுதர்சன நாச்சியப்பன் தலைமை வகிக்கிறார். அமைச்சர் தங்கம் தென்னரசு புதிய கட்டடத்தைத் திறந்துவைக்கிறார்.

கல்லூரியின் முன்னாள் மாணவர் - திருச்சி மாவட்ட ஆட்சியர் தா. சவுண்டையா, கல்லூரி செயலர் வி. பழனியப்பன் உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசுகின்றனர்.

தொடர்ந்து கவியரங்கமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

விழா ஏற்பாடுகளை, சன்மார்க்க சபை நிர்வாகம், கல்லூரி முதல்வர் தா. மணி மற்றும் அனைத்துத் துறை பேராசிரியர்கள், விழாக் குழுவினர் செய்துள்ளனர்."



பொன்னமராவதி அடுத்த மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற முன்னாள் மாணவர் சங்க ஆண்டு விழாவில் தமிழறிஞர் தமிழண்ணல் பேசுகிறார்.

முதன்முதலில் நிறைவேற்றியது இக்கல்லூரியில்தான்

# தமிழை செம்மொழியாக்க தீர்மானம்

## மேலைச்சிவபுரி கல்லூரி விழாவில் தமிழறிஞர் தமிழண்ணல் பேச்சு

பொன்னமராவதி, ஏப். 17: தமிழை செம்மொழியாக்க வேண்டுமென்று முதன்முதலில் தீர்மானம் நிறைவேற்றியது மேலைச்சிவபுரி கணேசர் கல்லூரியில்தான் என்று தமிழறிஞர் தமிழண்ணல் தெரிவித்தார்.

பொன்னமராவதி அடுத்த மேலைச்சிவபுரி கணேசர் கலை அறிவியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்க ஆண்டு விழா மற்றும் நிறுவியோர் நாள் விழா நடைபெற்றது. தலைமை வகித்த தமிழறிஞர் தமிழண்ணல் பேசியதாவது:

மாணவர்கள் தாங்கள் பயின்ற நிறுவனங்களை என்றும் நன்றியுடன் நினைவில் கொள்ள வேண்டும். நமக்கு வாழ்வளித்த ஆசிரிய பெருமக்கள் என்றும் நமது வணக்கத்திற்கு உரியவர்கள். 102 ஆண்டுகளுக்கு முன் இக்கல்லூரியை நிறுவியோரின் தொலைநோக்கு சிந்தனை நமக்கு வியப்பளிக்கிறது. இங்கு பயின்றவர்கள் பெரும் தமிழறிஞர்களாக, பேராசிரியர்களாக பின்னாளில் உருவாகியுள்ளனர். இங்கு பயின்ற பலரும் அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர்களாக உயர்ந்துள்ளனர். இங்கு பயின்ற கவிஞர் முடியரசனார் திராவிட இயக்க பெருங்கவிஞராக புகழ்பெற்றார்.

நூறாண்டுகளுக்கு முன் சாலை வசதியே இல்லாத இந்த குக்கிராமத்தில் இக்கல்லூரி உருவானது. அந்த காலத்தில் அரசாங்கமே கல்வி உதவித்தொகை வழங்காத நிலையில் இக்கல்லூரி நிறுவனர்கள் மாணவர்களுக்கு தங்க இடமும், உண்ண உணவும், உபகார தொகையும் கொடுத்துள்ளனர். இந்த கல்லூரி தோன்றிய பிறகே அண்ணாமலை பல்கலைக்கழகம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் மதுரை தியாகராசர் கல்வி நிறுவனங்கள் ஆகியவை தோற்றுவிக்கப்பட்டன. அதுவரை கோயில் திருப்பணிகளிலும், சைவ சமய தொண்டிலும் ஈடுபட்டிருந்த நகரத்தார்கள் கல்விப்பணி செய்ய காரணமான முன்னோடியாக இக்கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது.

பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரின் கருத்துப்படி வள்ளல் பழனியப்ப செட்டியார், வள்ளல் அண்ணாமலை செட்டியார் ஆகியோரால் ஏற்படுத்தப்பட்ட இக்கல்லூரிக்கு வந்து சொற்பொழிவாற்றாத தமிழறிஞர்களே இல்லை எனலாம். தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர் 3 முறை இக்கல்லூரிக்கு வந்து பேசியுள்ளார். தமிழ்த்தென்றல் திருவிக, ரா.பி. சேதுப்பிள்ளை, சோமசுந்தர பாரதியார், ரா.ராகவையங்கார், மு. ராகவையங்கார், விபுலானந்தர் போன்ற பெருந்தமிழறிஞர்களை கொண்டு ஆண்டுதோறும் தமிழ் மாநாடுகளை இக்கல்லூரி நடத்தியுள்ளது.

தமிழ்மொழியை செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று முதன்முதலில் தீர்மானம் இயற்றியதும் இங்குதான். 1918ல் மதுரை வக்கீல் ஜெ. எம்.சோமசுந்தரம் என்பவரால் இத்தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் அன்றைய ஆங்கில அரசுக்கும், இந்திய பல்கலைக்கழகங்கள் பலவற்றுக்கும் அனுப்பப்பட்டது. அந்தளவு உயர் கல்வியிலும் தமிழின் உயர்விலும் இக்கல்லூரி முன்மாதிரியாகத் தொண்டாற்றியுள்ளது.

இவ்வாறு தமிழண்ணல் பேசினார்.

கல்லூரி முன்னாள் முதல்வர் முத்தப்பன், முன்னாள் மாணவரும், தமிழாசிரியர் சங்க முன்னாள் மாநிலத் தலைவருமான தெய்வநாயகம் ஆகியோர் பேசினர். சன்மார்க்க சபை தலைவர் ப.சா.சிங்காரம், கல்லூரி முதல்வர் தா.மணி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். முன்னாள் மாணவர் சங்க தலைவர் புலவர் திருநாவுக்கரசு வரவேற்றார். பொருளாளர் கனகராசு அறிமுகவுரை ஆற்றினார். சங்க செயலாளர் புலவர் கருப்பையா நன்றி கூறினார். முன்னாள் மாணவர் சங்கம் சார்பில் எழுதும் பலகையுடன் கூடிய 75 நாற்காலிகள் கல்லூரிக்கு வழங்கப்பட்டது. கல்லூரிக்குழு தலைவர் நாகப்பன், செயலாளர் சாமிநாதன், ராமலிங்கம், சொக்கலிங்கம், பேராசிரியர்கள் ரோஸ்லெட், பூங்குன்றன், ரங்கநாதன், சொர்ணம், விஜயரகுநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

இரவு நேரங்களில் நடைபெறும்

## சமூக விரோத செயல்களை தடுக்க நடவடிக்கை தேவை

புதுக்கோட்டை, ஏப். 17: ...ளில் நடை...

பொதுமக்கள் கோரிக்கை

புதுக்கோட்டை, ஏப். 17: | பொதுமக்கள் | பெரும் தமிழறிஞர்களாக, அழகப்பா பல்கலைக்கழகம் ... தமிழ்த்தென்றல் திருவிக, கல்லூரி முன்மாதிரியாகத் உள்ளிட்டோர் ...